2007 ஜனவரி 24]

திரு. விடியல் எஸ். சேகர்: ஒரே ஒரு நிமிடம். அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஓரத்துப்பாளையத்திலே, நொய்யல் ஆற்றிலே மாசுப் பிரச்சினைக்கு, காளிங்கராயன் வாய்க்காலில் இருக்கிற மாசுப் பிரச்சினைக்கு, பெருந்துறை சிப்காட் தொழிற்சாலை மாசுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக பைப் லைன் மூலமாக அதைக் கொண்டு வந்து, அந்த R.O. system அமைத்து, அதைச் சுத்திகரித்து கடலிலே கலக்க வேண்டிய திட்டம், மிகப் பெரிய திட்டமாக இருக்கிறது. அத்திட்டத்தினை மத்திய, மாநில அரசுகள் நிறைவேற்றிட ஆவன செய்திட வேண்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 25-1-2007 (வியாழக்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

5. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 28-8-1991 முதல் 5-2-1993 வரையிலான கால அளவிற்கு விற்பனை செய்த ஆர்.டி.எஸ். கிரில்களின் மீது வணிகர்கள் செலுத்த வேண்டிய எட்டு சதவீதம் மற்றும் நான்கு சதவீதத்திற்கும் இடையிலான வரி வேறுபாட்டுத் தொகை, மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி ஆகியவற்றை வணிகர்கள் எட்டு சதவீதம் என்கிற உயர் வீதத்தில் வரி வசூலித்திருக்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்தது குறித்து 27-10-2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அரசாணை (2டி) எண் 154-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) பிரிவு 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

7. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

25. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

26. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS